3. தகவல் கோரல்

(அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையைக் (ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டது) குறித்து

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் 26-4-95 அன்று இரவு 7 மணி அளவில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். அனுமதி மறுத்ததற்கான காரணமும் கூறியிருக்கிறேன். ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் 13 பேர் நேற்றைய தினம் ஒரு மறியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார்கள் என்கிற செய்தியை காவல்துறை ஆணையாளர் எனக்குக் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) இது எல்லாப் பகுதிகளிலும் நடப்பதுதான். நீங்கள் நாளைக்கு மறியல் செய்கிறீர்கள் என்றால், உங்களைக் கைது செய்வார்கள், பின்னர் உடனே விடுவிப்பார்கள். அந்தத் தகவலை எனக்குத் தெரிவிப்பார்கள். (குறுக்கீடு) அதைப்போல, அவர்களுக்கு இருக்கிற உரிமை, அவர்கள் மறியல் செய்திருக்கலாம். அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம். அதுபற்றிய அறிவிப்பு எனக்கு வந்து விட்டது. மேற்கொண்டு இதிலே விவாதம் தேவையில்லை. (குறுக்கீடு) எல்லோருக்கும் இருக்கிற உரிமை. அதனால், அதற்கு அனுமதி மறுத்து இருக்கிறேன். நான் உங்களுக்கு அனுமதி மறுத்தப் பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. அதுகூட, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்னைச் சந்தித்துச் சொன்ன காரணத்தினாலே நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் சந்தித்து, என்னிடத்திலே கொடுத்தீர்கள். (குறுக்கீடு) அதைப்பற்றி ஏன் விவாதம்? எனக்குத்தான் தகவல் வந்திருக்கிறது என்று சொல்கிறேன் அல்லவா? அவர்கள் மறியல் செய்திருக்கிறார்கள். மறியல் செய்தவர்கள், கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னைக் கண்டித்து அண்ணாசாலையிலே போய் மறியல் செய்தீர்கள். உங்களையும் அதைப்போலக் கைது செய்தார்கள். அப்புறப்படுத்தினார்கள், அதற்குப் பின்னர் விடுவித்தார்கள். அதைப் பற்றிய செய்தியும் இங்கே வந்தது. இதெல்லாம் ஒவ்வொருவருக்கும் இருக்கிற உரிமை. (குறுக்கீடு) உங்களுக்கு மட்டும்தான் உரிமை இருக்கிறதா? பாக்கி இருக்கிற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லை என்று சொல்லுகிறீர்களா? நீங்களே ஏதேதோ செய்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) என்னைக் கண்டித்து அண்ணாசாலையில்

போய் மறியல் செய்தீர்கள். உங்களையும கைது செய்து அப்புறப்படுத்தி, பின்னர் விடுவிக்கப்பட்டதை, இதே போன்று காவல்துறை ஆணையர் எனக்குச் செய்தி அனுப்பினார். அதையெல்லாம் விவாதித்துக் கொண்டிருந்தது கிடையாது. (குறுக்கீடு) அதையெல்லாம் விவாதிக்க அனுமதிப்பது இல்லை. (குறுக்கீடு) அதையெல்லாம் விவாதிப்பது இல்லை. நீங்களும் சட்டமன்ற உறுப்பினர்தான். நீங்கள் போய் ஒரு மறியல் செய்கிறீர்கள். உங்கள் மீது எந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ, அதைப்போன்று அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இதில் வேறு ஒன்றும் இல்லை. அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) மறியல் செய்வது என்பது ஒவ்வொருவருக்கும் இருக்கிற உரிமை. அந்த உரிமையைச் சிலர் பயன்படுத்துகிறார்கள். காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-30

அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்கிற காரணத்தினால். எனக்கும் அதுபற்றிய அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினை, எனக்கே தெரிந்த பிரச்சினை. (குறுக்கீடுகள்) இதிலே மேற்கொண்டு விவாதம் ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடுகள்) விவாதத்திற்குரிய பொருளே இதுவல்ல. இது விவாதத்திற்குரிய பொருள் என்றால், மிகவும் அவசரப் பொது முக்கியத்துவம் இருக்க வேண்டும். இதிலே ஒன்றும் பெரிய முக்கியத்துவம் இல்லை. (குறுக்கீடுகள்) இதிலே, பொது முக்கியத்துவம் இல்லை என்பதால், அடுத்த பிரச்சினையை எடுக்க என்னை அனுமதிக்க வேண்டும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை ; நான் இதை அனுமதிக்க முடியாது. நீங்கள் கேட்டீர்கள் ; நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) ஒவ்வொரு முறையும் இதேமாதிரி முறைகேடாக நடப்போம் என்றிருந்தால், என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) ஒவ்வொரு முறையும் இதேபோன்று முறைகேடாக நடந்து கொண்டிருப்போம் என்றால், நான் இதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் இதை அனுமதிக்க முடியாது. அடுத்தப் பிரச்சினைக்கு நான் செல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) 25-4-1995 அன்று, அதிகாலையில் பெரியார் மாவட்டம் வெள்ளக்கோயில் அருகே, லாரி விபத்தில் பலர் இறந்தது குறித்து, திரு. ஆ. சுப்புரத்தினம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர், அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று என்னிடத்தில் ஒரு பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

(திரு. வே. கண்ணன், திரு. ஆர். சிங்காரம், திரு. கே. கே. சின்னப்பன், திரு. இரா. அப்பு நடேசன் மற்றும் திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோரைத்

தவிர, அவையிலிருந்த மற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுதான் மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் நடந்துகொள்ளும் முறை ! (குறுக்கீடுகள்) பல உறுப்பினர்களுக்கு, வெளியே போவதற்கு மனமே இல்லை. (குறுக்கீடுகள்)

(ஆ) முன் அனுமதியின்றி பிரச்சினையை எழுப்புதல்

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கநாதன் நீங்கள் சட்டமன்ற உறுப்பினரா ? அல்லது வேறு ஏதாவது முறைகேடான ஆளா என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்தால்தான் நான் அனுமதி கொடுக்க முடியும். (குறுக்கீடு) என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதை நடைமுறையிலே வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) அவ்வாறு கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையும் இருக்கிறது. என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல், எதையும் எழுப்ப முடியாது. (குறுக்கீடு) என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதற்கும் என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வராமல், எந்த பிரச்சினையையும் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

பக்தர்கள் சென்ற லாரி வெள்ளக்கோவில் அருகே விபத்துக்குள்ளாகி பலர் இறந்தது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியார் மாவட்டம், வெள்ளக்கோயில் அருகே ஏற்பட்ட லாரி விபத்தில் பலர் இறந்தது குறித்த பிரச்சினையைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசின் நடவடிக்கை பற்றி அறிய வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர்கள்